
உ

சிவமயம்

# ல்கண்ணாப்பூர்

என வழங்கும்

# கன்றாப்பூர்



# வரலாறு

T.14778

1982.

உ

சிவமயம்.

# கோயில்கண்ணாப்பூர்

என வழங்கும்

# கன்றாப்பூர் தல வரலாறு


திருவாரூர், புலவர்மணி

வித்துவான் மு. இரத்தின தேசிகர் அவர்களால்

எழுதப்பெற்றது.



5 - 9 - 1982

குடமுழுக்கு நாள் வெளியீடு.

# முன்னுரை.

கன்றுப்பூர், தமிழகத்தில் உள்ள பாடல் பெற்ற திருக் கோயில்களில் ஒன்று. சிறிய அழகிய திருக்கோயில் என்னும் இதன் நிர்வாகம் சீரிய முறையில் நடந்து வருகிறது

தமிழக அரசின் இந்து சமய அறநிலையத்துறை பொறுப்பை ஏற்று நடத்திய C. M. இராமச்சந்திரன் செட்டியார் அவர்கள் காலத்தில் எல்லாத் திருக்கோயில்களுக்கும் வரலாற்றுச் சிறு நூல்கள் (Guide Book) எழுதப்பெற்று வந்தன. இந் நூலால் கோயிலின் பெருமையை பொதுமக்கள் உணரும் வாய்ப்பு உண்டாகிறது.

இக்கோயிலுக்கும் சுமார் 15 ஆண்டுகளுக்கு முன், குடந்தை, வித்துவான் திரு சொ. கணபதி தேசிகர் அவர்களால் விரிவான வரலாற்றுச் சிறுநூல் ஒன்று எழுதப் பெற்று, அச்சாகாமல் இருந்து விட்டது. இப்பொழுது 5—9—82 அன்று நிகழும் குடமுழுக்கு விழாவில் ஒரு அங்கமாக இவ் வரலாற்றுச் சிறுநூல் வெளிவருகிறது. திருவாரூர், புலவர்மணி வித்துவான், திரு மு. இரத்தின தேசிகர் அவர்கள் இந் நூலை எழுதித் தந்துள்ளார்கள்,

பொதுமக்கள் இந் நூலைப் பயின்று இறை நெறியில் நின்று இம்மை மறுமைப் பேறுகளை எய்துவார்களாக.

S. கோதண்டன், DRS.,
செயலர் – பொருளர்,
திருப்பணிக் குழு.

கோயில்கன்றுப்பூர்,
5—9—1982.

# துதிப் பாடல்கள்.

□

## அருள்மிகு விநாயகர் துதி

வெய்யவினைக் கட்டறுக்கும் வேண்டுவதே பரிந்தளிக்கும்
கையிரண்டி ஞற்றெழுவோர் கருத்துருநோய் போக்கியிடும்
வையகத்துக் கன்றுப்பூர் வந்தமர்ந்த விநாயகனின்
துய்யவெழிற் பதம்போற்றித் தொல்வினைகள் அகற்றிடுவோம்.

## அருள்மிகு நடுதறிநாதர் துதி

நயந்திருக்கும் அன்பிற்காய் நடுதறியில் வந்தபிரான்
பயனளிக்கும் பெருங்கருணை படர்ந்திடும் திருவடிகள்
அயர்ந்திருக்கும் மருள்நீக்கி அகத்தடைப்பார் தமக்குநலம்
உயர்ந்திருக்கும் என்பதன்றே உலகேத்தும் உண்மையதே.

## அருள்மிகு மாதுமையாள் துதி

பாண்டவ யாற்று மருங்கினிலே
பாரோர்க் கெல்லாம் நெறிகாட்டி
வேண்டுவ ஈந்தே மாதுமையாள்
வீற்றினி திருந்து அருள்புரிவாள்
காண்டகு மழுதாய்க் கலந்தேத்தும்
காதலர் நெஞ்சுள் தனியொளியாய்
தூண்டாச் சுடராய் நின்றிடுவாள்
துலங்கும் அவளின் அடிபோற்றி.

## அருள்மிகு முருகன் துதி

கன்ருப்பூர் நின்றிருக்கும் கடம்பணிந்த திருமுருகன்
குன்ருத போளுளே கொண்டிருக்கும் உளமுடையார்
பொன்ருத வாழ்வுடனே புவியிலுறு பேறுகளும்
ஒன்ருலும் குறையில்லா உயர்வாழ்வும் பெறுகுவரே.

## அருள்மிகு சண்டீசர் துதி

அண்புக் கனியாம் சிவபெருமான்
அருந்தாள் நெஞ்சிற் கொண்டதளுல்
என்புள் ளுருகும் பேரன்பால்
எழிலார் பூசை மேயபிரான்
முன்புக் கெதிர்ந்த தாதைதாள்
முன்னே எறிந்த திருவாளன்
பொன்புக் கிருந்த சேவடிகள்
போற்றி வினைகள் போக்குவமே.

உ

# கன்றுப்பூர்த் தல வரலாறு.

## தல அமைப்பு:

"ஆலயம் தொழுவது சாலவும் நன்று" என்பது ஔவையாரின் அரிய வாக்கு. "ஊரானோர் தேவகுலம்" என்று பழம் புலவர் ஒருவர் கூறினார். அப்படிப்பட்ட ஆலயங்கள் அமைந்துள்ள இடங்கள் தலங்கள் எனப்பெறும். தென்னாட்டிலும் பிற நாடுகளிலும் பாடல்பெற்ற சிவத்தலங்கள் இருநூற்று எழுபத்து நான்கு உள்ளன. காவிரியின் வடகரையில் அறுபத்து மூன்று பாடல் பெற்ற சிவத்தலங்களும், காவிரியின் தென்கரையில் நூற்று இருபத்தேழு பாடல் பெற்ற சிவத்தலங்களும் உள்ளன. காவிரிக்குத் தென் கரையில் உள்ளவற்றில் கன்றுப்பூர் ஒன்று. கோயில் என்று அடைமொழியைப் பெற்று இத்தலம், உலக வழக்கில் வழங்கப் பெறுவது இதன் பழமையையும், பெருமையையும் உணர்த்துகின்றது.

தென்னாட்டில் காவிரி பாய்வதால் வளம் கொழிக்கும் பகுதி, தஞ்சை மாவட்டம். நெல் விளையும் நிலவளமும், சோலை வளமும் நிரம்பப் பெற்றது தஞ்சை மாவட்டம். இதில் உள்ள பல வட்டங்களில் திருவாரூர் வட்டத்தில் உள்ளது கன்றுப்பூர். பாண்டவாறும், வெள்ளையாறும் இத்தலத்தின் அண்மையிற் பாய்வதால் கன்றுப்பூர் நிலவளமுடையதாய் உள்ளது. இவ்வூரில் 600 மக்கள் வாழ்கின்றனர். பள்ளி – கீழ்வேளூர் ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளி.

இத்தலம், திருவாரூர் - திருத்துறைப்பூண்டி புகை வண்டிப் பாதையில் உள்ள மாவூர் புகைவண்டி நிலையத்திலிருந்து கிழக்கே சுமார் 6 கி. மீ. தொலைவில் உள்ளது.

திருவாரூர் - திருத்துரைப்பூண்டி கற் சாலையில் மாவூரில் இருந்து கிழக்கே 5 கி.மீ. தொலைவில் உள்ளது கீழ்வேளூர் - திருத்துரைப்பூண்டி கற் சாலையில் கச்சனத்திலிருந்து மேற்கே 8 கி.மீ. தொலைவில் கன்றுப்பூர் உள்ளது. திருவாரூரிலிருந்து புறப்படும் எண் 5 நகரப் பேருந்து நாகலூர் செல்கிறது. நாகலூரிலிருந்து தெற்கே $1\frac{1}{2}$ கி. மீ. தூரத்தில் கன்றுப்பூர் உள்ளது. திருவாரூரிலிருந்து புறப்படும் எண் 18 நகரப் பேருந்து எட்டுகுடிக்குச் செல்லும் வழியில் கன்றுப்பூரை அடைந்து செல்கிறது

**இத்தலத்தை அடுத்துள்ள சிவத் தலங்கள் :**

கன்றுப்பூருக்கு கிழக்கே 3 கி மீ. துரத்தில் சாட்டியக்குடியும், மேற்கே 5 கி.மீ தூரத்தில் நாட்டித்தான்குடியும் தெற்கே 3 கி. மீ. தூரத்தில் வலிவலமும் உள்ளன.

## தல விசேடம்:

சிதம்பரம், திருக்காளத்தி, கீழ்வேளூர், நாகைக் காரோணம் முதலிய தலங்களில் மேம்பட்டது கன்றுப்பூர். இத்தலத்தை ஒருமுறை வழிபட்டால் உலகிலுள்ள எல்லாச் சிவத் தலங்களையும் வழிபட்ட பலன் கிடைக்கும். இத்தலத்தின் வழியே நடந்து சென்றால் இத்தலத்தில் தங்கி வாழ்ந்த புண்ணியத்தைப் பெறலாம். இத்தலத்தில் தங்கி அறம் புரிவோர் நல்ல மனைவி - நல்ல மகள் எய்தப் பெற்று, எல்லா நலங்களையும் பெறுவர். கன்றுப்பூர் என்று ஒருமுறை சொன்னாலேயே பாவம் கெடும். நோய் நீங்கும். நல்வாழ்வு கிட்டும். இத்தலத்தே வாழ்வோர் - இம்மையில் சிவயோகத்தமர்ந்து, மறுமையில் சிவபோகந் துய்ப்பர்.

## தீர்த்த விசேடம்:

ஞானகுபம்: இது ஆலயத்தின் உள்ளே உள்ள ஒரு கிணறு. ஒரு காலத்தில் ஒரு வணிகன் இத் தீர்த்தத்தில் நீராடி, நடுதறிநாதரை வணங்கி கண்ணோய் நீங்கப்பெற்றான்.

ஞானமிர்தம்: அம்பிகை சந்நிதியில் வயல்களின் நடுவே கிணருகத் திகழ்கின்றது பழங்காலத்தில் வைகாசிப் பெரு விழாவில் இத் தீர்த்தத்தில் தீர்த்தவாரி நடைபெற்றது.

சிவகங்கை: இத்திருக்குளம் திருக்கோயிலின் கிழக்கே உள்ளது இதில் மூழ்குவோர் குட்டம், முயலகன், குன்மம், சூலை, வாதம், காசம், கண்ணோய், தலைநோய், சுரம், விக்குள், கிரந்தி முதலிய பல நோய்களிலிருந்து உய்வர். புத்திரச் செல்வம் உண்டாகும்; புகழ் உண்டாகும்; மறுமையில் வீடு கிட்டும்

கருணமிர்தம்: இது ஆலயத்திற்கு மேற்குத் திசையில் உள்ளது. இதனைப் பார்த்து வணங்கினாலேயே இறைவனுகிய நடுதறிநாதரது அருள் கிட்டும். மூழ்குவோர் எல்லாப் பேறுகளையும் பெறுவர்.

## கோயிலமைப்பு:

அருள்மிகு நடுதறிநாதர் திருக்கோயில் கன்றுப்பூரில் சோலைகளுக்கும், வயல்களுக்கும் நடுவே கிழக்கு நோக்கி அமைந்துள்ளது. இத்திருக்கோயிலுக்கு ஒரே இராஜகோபுரம் உள்ளது. கோயிலைச் சுற்றி நான்கு வீதிகள் உள்ளன. கோயிலின் உள்ளே இரண்டு பிரகாரங்கள் உள்ளன, முதல் பிரகாரத்தில் உள்ள சுற்றுப்புறத் திருமதில்கள் சிறியவை அடுத்த உட்பிரகாரத்தில் உள்ள மதில்கள் புதுமையாகவும், உயரமாகவும் உள்ளன. இராஜகோபுரம் சுதை வேலைப்பாடுகள் இன்றி சுத்தமாகவே இருக்கிறது இந்தக் கோபுரத்தில் நுழைவாயிலை அடுத்து மேலே மூன்று மாடங்களின் வாயில்கள் உள்ளன.

அருள்மிகு மாதுமைநாயகியின் திருக்கருவறை முன்னர் முதல் சுற்றிலேயே தெற்கு நோக்கி இருந்த சுவடுகள் உள்ளன. இப்பொழுது அம்பிகையின் கருவறை உள் சுற்றிலேயே தெற்கு நோக்கி உள்ளது.

இராஜகோபுரத்தைக் கடந்து முதற்சுற்றில் வலமாக வந்தால் தென்புறத்தில் மடைப்பள்ளி உள்ளது அருகில் மணிமண்டபம் அமைந்துள்ளது எதிராக இடப தேவர் பலிபீடத்துடன் காட்சியளிக்கிறார். பலிபீடத்தின்முன் கிழக்கு மேற்கு நீளத்தில் சுமார் 75 அடியும், தெற்கு-வடக்கு அகலத்தில் சுமார் 45 அடியும் உள்ள கருங்கல்லாலான மேடை அடி உயரத்தில் உள்ளது. இம்மேடையின் மீது அருள்மிகு நடுதறிநாதரின் கருவறை அர்த்த மண்டபம், மகாமண்டபம், அருள்மிகு மாதுமைநாயகியின் கருவறை, கருங்கல் மண்டபம் முதலியன அமைந்துள்ளன

அருள்மிகு நடுறிதறிநாதரின் திரு முன்னர் உள்ள மகா மண்டபத்தில், அருள்மிகு சோமாஸ்கந்தர், விநாயகர், சுப்பிரமணியர். சண்டேசுவரர், நடராஜர், சிவகாமியம்மை, சந்திரசேகரர் முதலிய ஐம்பொன் தெய்வ வடிவங்கள் சிறந்து விளங்குகின்றன. அப்பால் அருள்மிகு மாரியம்மன், மாணிக்கவாசகர். சுந்தரர், ஆடிப்பூர அம்மன், பிரதோட நாயகர், அஸ்திர தேவர் முதலிய ஐம்பொன்னாலான தெய்வ வடிவங்களும் உள்ளன.

மேற்குச் சுற்றில் உள்ள திருமாளிகைப் பத்தியில் நிருத்தன விநாயகர், சுந்தரேசுரர், சுந்தரவிநாயகர், சித்தி விநாயகர், சத்திவிநாயகர், முத்திவிநாயகர். நர்த்தனவிநாயகர், பாலவிநாயகர் முதலியவரது கல் திருமேனிகள் அமைந்துள்ளன. அருள்மிகு பாலசுப்பிரமணியர் ஆலயம் இடையில் தனியாக உள்ளது பிடாரி, ஜேஷ்டாதேவி, ஐயனார், கற்பக நாதர் முதலிய கல் திருமேனி தாங்கிய மூர்த்திகளும் காட்சியளிக்கின்றனர். கஜலட்சுமி திருஉருவமும் உள்ளது. இந்த குடமுழுக்கு விழாவின்போது புதிய பிம்பங்களாக நவக்கிரகங்களும், துர்க்கையும் நிறுவுவது சிறப்பு அம்சமாகும்.

வடக்குச் சுற்றில் சண்டிகேஸ்வரர் ஆலயம் அமைந்துள்ளது. தலவிருட்சம் கற்பனை இருந்ததாகக் கூறுகிறார்கள். ஆனால் இன்று அப்பனை இல்லை. கல்லால் என்பது போல

கற்பனை என்பது ஒரு பனை மரத்தின் பிரிவாக இருக்கவேண்டும். கல்லாலான பனை என்று பொருள் கொள்வது பொருந்தாது.

கோயிலின் முன்புறம் உள்ள சிவகங்கை தீர்த்தத்தின் மேல் கரையில் பிள்ளையார் திருக்கோயில் ஒன்றுள்ளது. இத் தலத்தே பலப்பல விநாயகர் திருமேனிகள் காணப்படுவது சிந்திக்கத் தக்கதாக உள்ளது

## கன்ருப்பூர் - பெயர்க் காரணமும், நடுதறிநாதர் வரலாறும்.

[கன்று – பசுங் கன்று. ஆப்பு – அக் கன்றைக் கட்டும் சிறு முளை. நடுதறி – நடப்பட்ட தறி. தறி – முளை.]

ஒரு காலத்தில் சிவபெருமான் உமாதேவியாருடன் கயிலாய மலையில் வீற்றிருந்தார். படைத்தல் முதலிய தொழில்கள் பிரமதேவனை முதலாகக் கொண்ட தேவர்களால் நடத்தப்பெற்றன. அப்பொழுது இறைவன் முன்பு சுதாவல்லி என்னும் வித்தியாதரப் பெண் உமை உருவந் தாங்கி நடித்து இறைவனுக்கு மகிழ்ச்சி உண்டாக்கினுள். இதைக் கண்ட உமாதேவியார் சுதாவல்லியை நோக்கித் தன்னுருக் கொண்ட அவளிடத்தில் சினங்கொண்டு, 'நீ மண்ணுலகத்தில் பிறக்க' எனச் சபித்தார். பின் நிகழ்ச்சி அறியாது நடித்த சுதாவல்லி கண் கலங்கினுள்; என்ன செய்வேன் எனப் பதறினுள். அப்பொழுது இறைவி, 'நீ மண்ணுலகடைந்து, சிவனைப் பூசித்து எம்மை அடைவாய்' எனக் கூறி அருள் பாலித்தாள்.

அப்படியே சுதாவல்லி தென்தமிழ் நாட்டை அடைந்து, தேவூருக்குத் தென்பால் திகழ்கின்ற இத் திருத்தலத்தில் பரம்பரைச் சைவ வேளாளர் மரபில் சிவஞானம் நிரம்பப் பெற்றுப் பிறந்து கமலவல்லி என்னும் திருப்பெயருடன் வளர்ந்து வந்தாள். இடையருது சிவபெருமானைச் சிந்தித்து வந்தாள். கமலவல்லி சைவ நெறியில் வளர்ந்து வந்தாள். பழ வினைத் தொடர்பால் சிவபூசனை செய்துவந்தாள். திருமணப் பருவத்தை அடைந்தாள். பெற்ருேர், கோத்திரம் - குலம் பார்த்துத் தக்கவன் என்று கருதிய ஒருவனுக்கு கமலவல்லியை

மணம் செய்வித்தனர். அந்த ஊரிலேயே தனி மாடம் மருங்கமைத்துப் பெற்ருேர் இல்லறத்தை நடத்தச் செய்தனர். கமலவல்லி, காரைக்கால் அம்மையாரைப் போன்று, இல் லிறைவனுக்கு இனியளாய் நடந்துவந்தாள் எனினும் உயி ரிறைவனுகிய சிவபெருமானிடத்துப் பேரன்பு பூண்டு, தக்க அறங்களைச் செய்து வாழ்ந்து வந்தாள். சிவனை இடைவிடாது பூசனை புரிந்தாள். கணவன், கமலவல்லியது உயர்வை உணராமல் அவள் சிவனை பூசிப்பதில் வெறுப்புக் கொண்டு சிவலிங்கத்தினை கமலவல்லி அறியாதவாறு ஒரு கிணற்றில் எறிந்துவிட்டான். கமலவல்லி இதனை உணர்ந்தாள். இல் இறைவனுக்கு மாருகச் சிவனை பூசிப்பதா அல்லது சிவ பூசனையை விடுவதா எனச் சிந்தித்தாள். இல்லிறைவன் அறி யாதவாறு சிவனைப் பூசை செய்வோம் என்ற முடிவிற்கு வந்தாள்.

> "தெய்வந் தொழாஅள் கொழுநற்றெழுது எழுவாள்
> பெய்யெனப் பெய்யும் மழை"

என்பது தமிழ்மறை. ஆயினும் உயிர் உய்திபெறச் செய்யும் சிவபுண்ணியச் செயலைக் கணவன் அறியாதவாறு செய்தல் அறமேயெனத் துணிந்தாள். அதனுல் தன் இல்லிறைவனையும் மறுமைப் பயனை அடையச் செய்யலாம் எனக் கருதினுள். என்ருலும், கணவர் முன் உலகவர் முன் மீண்டும் ஒரு சிவலிங்கத்தைப் பூசிக்க எண்ணிலள். அயலறியாவண்ணம் சிவபூசனையைச் செய்ய விரும்பினுள். எந்த உருவமாயினும் அதைச் சிவனெனவே கருதினவருக்கு அந்த உருவில் இறைவன் வெளிப்படுவான். குறிகளும், அடையாளமும் ஆயிரம் ஆயிர மாகப் பெருகினும் அவ்வவற்றில் ஆண்டவன் வெளிப்பட்டு அருள்சுரப்பது மெய் ஆதலின் கமலவல்லி தன் வீட்டுப் பசுங் கன்று கட்டும தறி ஒன்றைச் சிவலிங்கமாகப் பாவித்துப் பூசை புரிந்து வந்தாள் இப்படி இவள் தன் கருத்துக்கு மாருக நடக்கிருள் என்பதை அறிந்த கமலவல்லியின் கணவன் சினம் மிக்கு அக்கன்று கட்டும் தறியினைக் கோடறி கொண்டு தாக்கினுன் உதிரம் வெளிப்பட்டது கமலவல்லியின் பக்தியை உலகவரும், அவள் கணவனும் அறிய இறைவன் அக் கட்டுத்

தறியில் இலிங்க வடிவு கொண்டு காட்சியளித்தார். கமலவல்லியும், கணவனும் சிவலோகமடைந்தனர். கன்று கட்டும் தறி இலிங்கமாக மாறியதால் இத்தலம் கன்றாப்பூர் என வழங்கப்பெற்றது. இந்த இலிங்கத் திருமேனி சுயம்பு மூர்த்தியாகத் தோன்றினும் தறியிலிருந்து தோன்றியதனால் உலகவர் நடுதறிநாதர் எனப் பெயர் சூட்டி இறைவனை வழிபடலாயினர். அந்தக் கன்றுக்குட்டியின் நடுதறி இருந்த இடமே இன்று நடுதறிநாதர் திருக்கோயிலாக விளங்குகின்றது. இன்றும் நடுதறிநாதரது உச்சியில் கோடறி வெட்டுள்ளதை அறியலாம். இந்தப் பேருண்மையை உலகவருக்கு உணர்த்தவே அப்பரடிகள் இத்தலத்திற்கு தாம் பாடிய பதிகத்தின் ஒவ்வொரு பாட்டின் இறுதியிலும் "கன்றாப்பூர் நடுதறியைக் காணலாமே" எனப் பாடிச் சென்றார்கள்.

[இத் தலத்தைப் பற்றிய சிறு குறிப்பு 'அபிதான சிந்தாமணி' என்ற நூலில் உள்ளது.]

## கன்றாப்பூருக்கு உமாதேவி வந்த வரலாறு.

ஏகனாக இருக்கின்ற இறைவன் உயிர்த் தொகுதிகள் உய்யும்வண்ணம் சத்தியும் - சிவனுமாகிய இரு கூறாயினான். சத்தியைத் தாயாகவும், சிவனைத் தந்தையாகவும் அழைப்பது சாத்திர மரபு. உலகத் தாயும், தந்தையும் வீற்றிருக்கும் இடம், திருக்கயிலாயமலை. இவர்கள் உயிர்கள் உய்யும்வண்ணம் எண்ணற்ற திருவிளையாடல்களைச் செய்துவருகின்றனர்.

ஒரு சமயம் இறைவனும், இறைவியும் கயிலை மலையில் வீற்றிருந்தபொழுது இறைவி, இறைவனின் கண்களைத் தன் கையால் பொத்தினாள் கயிலை இருண்டது. உலகங்கள் எல்லாம் இருண்டன. ஒளி படைத்த சூரியன், சந்திரன் முதலானவையும் இருண்டன எங்கும் ஒரே இருள்மயம். அருட்கண் புதைக்கப்பட்டதால் அனைத்தும் இருண்டதைக் கண்டு உமாதேவி வியந்தாள். பன்னெடுங்காலம் இப்பேரிருள் நிலைத்து நின்றது. உயிர்கள் எல்லாம் பெரிதும் துன்புற்றன. உமாதேவி தன் கைகளை எடுத்தாள். இறைவனது அருட்

கண்ணுக்கு எங்கும் பரவிற்று. இருளகன்றது. எல்லாப் பொருள்களும் ஒளிபடைத்தன.

அப்பொழுது இறைவன் உமாதேவியாரை நோக்கி, "மலையரசன் மகளே! நீ எம் கண்களைப் புதைத்தது நமக்கு ஒரு நொடிப் பொழுதாயினும் உலகங்களிலுள்ள உயிர்களுக்கு அது பன்னெடுங்காலமாக நீண்டு பெருந் துயரை உண்டாக்கிற்று. அப்பாவம் உன்னையே சாரும். அப் பாவ நீக்கத்திற்கு நீ மண்ணுலகத்திற்குச் செல்ல வேண்டும். தென்னாட்டில் கன்றாப்பூர் என்றொரு சிவத்தலம் உண்டு. அங்கே நான் தனித்திருக்கிறேன். அத்தலத்தில் நீ எனக்குப் பூசனை புரிந்து வழிபடுவாயாயின் அப் பாவம் நீங்கும்" என்று கூறியருளினார். விளையாட்டு வினையானதை உணர்ந்த உமாதேவி, இறைவனைப் பிரிவதற்கு ஆற்றாதவளாய் மிகவும் வருந்தினாள். பின்னர்த் தேறி மண்ணுலகடைந்து கன்றாப்பூரைக் குறுகினாள். அவ்வூரை அடுத்துப் பாயும் பாண்டவ ஆற்றங்கரையில் சிவபெருமானுக்கு மணலால் இலிங்க வடிவமைத்து வழிபட்டு வரலானாள்.

சிவபெருமான் உமாதேவியாரின் அன்பின் பெருக்கை உலகவருக்குக் காட்டப் பாண்டவையாற்றில் பெரும் வெள்ளம் வரச் செய்தார். அவ்வெள்ளம் தான் வழிபடும் இலிங்கத் திருமேனியில் பாய்வதைக் கண்ட அம்மை பெரிதும் வருந்தினாள். தன் இரு கரங்களாலும் இலிங்கத் திருமேனியைத் தழுவிக் கொண்டாள். தழுவக் குழைந்த தண்ணருளாளர் அவ்விலிங்கத்தினின்றும் தன் திருவுருவோடு வெளிப்பட்டு அம்மைக்குக் காட்சி கொடுத்தார். அம்மையாரை மணந்துகொண்டார். அன்று தொட்டு கயிலையில் இருப்பதுபோல் இறைவனும், இறைவியும் கன்றாப்பூரிலும் அர்ச்சனை புரிவதற்கேற்ற திருவுருத் தாங்கி உறைவாராயினர். அம்மையார் இறைவனின் இடப்பாகத்தமர இருவரும் இன்று நமக்கு இன்னருள் சுரந்து வருகின்றனர்.

[இவ்வரலாறு காஞ்சீபுரத்தில் கம்பையாற்றங்கரையில் காமாட்சி அம்மை மணலால் இலிங்கம் அமைத்து இறைவனை வழிபட்ட வரலாற்றோடு ஒத்திருக்கிறது.]

# இடும்பன் வரலாறு.

கன்றுப்பூர் பாரதக் கதையோடு ஒருவாறு தொடர்பு கொள்ளுகின்றது. பாரதக் கதையில் தருமன் முதலிய ஐவரும் பாண்டு என்ற அரசனுக்கு மக்களாகப் பிறந்ததால் பஞ்ச பாண்டவர்கள் என்று அழைக்கப் பெற்றனர். இவர்கள் வனங்களில் வாழும் நிலையை அடைந்தபொழுது எங்கும் சுற்றிச் சென்றுள்ளனர். அவர்கள் தென்னுடு வந்த பொழுது கன்றுப்பூரையும் அடைந்திருக்கின்றனர். அதனுல் கன்றுப்பூரை அடுத்து ஓடும் ஒரு ஆறு பாண்டவாறு என்று அவர்கள் நினைவாக அமைக்கப் பெறுவதாயிற்று. இன்றும் அப்பெயராலேயே அவ் வாறு அழைக்கப் பெறுகின்றது.

பாரத வரலாற்றில் **இடும்பன்** என்ற ஒருவனது பெயர் இடம் பெறுகின்றது. இந்த இடும்பனைப் பற்றிய இரு வரலாறுகள் கன்றுப்பூரோடு தொடர்பு கொள்ளுகின்றன. இடும்பன் பூசனை புரிந்ததால் கன்றுப்பூருக்குச் சற்றுத் தொலைவில் உள்ள ஒரு சிவத்தலம் இடும்பவனம் என்று இன்றும் அழைக்கப் பெறுகின்றது. இரு வரலாறுகளிலும் வரும் இடும்பனை ஒருவனுகவே கருதுவதா – வேறு வேருகக் கருதுவதா என்பது ஐயப்பாட்டிற்கு உரியதாக உள்ளது.

## இடும்பன் - 1

இமயமலைச் சாரல் தவ வாழ்விற்கு ஏற்ற இடம். பன்னெடுங்காலமாக இம்மலைச் சாரலில் முனிபுங்கவர் இருந்து அருந்தவ வாழ்வை மேற்கொண்டுள்ளனர். காம்பீலி தேசம் இம் முனிபுங்கவர்களுக்கு உறைவிடமாகிய இமய மலையை அடுத்துள்ள ஒரு தேசமாகும். இந்த தேசத்தில் இடும்பன் என்ற ஒருவன் வாழ்ந்து வந்தான். முனிவர்களை அடுத்து வணங்கி அவர்களது நல்லுபதேசங்களைப் பெற்று வந்தான். சிறந்த மங்கை நல்லாளை மணந்து இல்லறத்தை இனிது நடத்தி வந்தான். “மற்றதன் நன்கலன் நன்மக்கட் பேறு” என்ற குறளுக்கேற்ப ஒரு நல்ல மகவைப் பெற அவன் விரும்பினுன். என்றுலும் அப்பேறு அவனுக்குக் கிட்டவில்லை. முனிவர் கூட்டத்தில் ஒருவராயிருந்த பராசர

முனிவரை இடும்பன் அடைந்து புத்திரப் பேறு பெறுவதற்கு வேண்டி நின்முன். பராசரர், "நீ தென்னுட்டிலுள்ள கன்றுப்பூரை உன் மனைவியோடு சென்று அடைந்து, அங்கு உள்ள சிவகங்கைத் தீர்த்தத்தில் மூழ்கி, நடுதறிநாதரை வழிபாடு செய்து புத்திரப் பேறு பெற வேண்டிக்கொள். உனக்குப் புத்திரப் பேறு கிட்டும்" என்முர். இடும்பனும் அவ்வாறே செய்தான். உத்தம குணம் வாய்ந்த ஒரு மகனைப் பெற்முன். நடுதறிநாதனின் கருணையை வியந்து பாராட்டினுன். இத்தலத்திலேயே தங்கி நடுதறிநாதருக்குப் பல விழாக்களை நிகழ்த்தி இறுதியில் இறைவனடியைச் சேர்ந்தான்.

## இடும்பன் - 2

பாண்டவர் காலத்து வாழ்ந்த இடும்பன், அற ஒழுக்க முடையவனுய் வாழ்ந்தான். முனிவர்களை அடுத்து அவர் களின் நல்லுபதேசங்களைக் கேட்டுப் பெருமையடைந்தான். அவனுக்குக் கண்ணேய் இருந்தது. முனிவர்களின் அற வுரையின்படி அவன் கன்றுப்பூரை அடைந்து சிவகங்கையில் நீராடி நடுதறிநாதரை வழிபட்டுக் கண்ணேய் நீங்கினுன். பன்னெடுங்காலம் இறை நெறி நின்று இறுதியில் வீடுபேறு எய்தினுன்.

## தர்ம சர்மா சாபம் நீங்கப் பெற்றது.

மாளவ தேசத்தில் தருமபுரம் என்னும் ஊரில் மேதாவி என்னும் முனிவர் ஒருவர் தவ வாழ்வில் இருந்தார். அவரிடம் பல மாணவர்கள் கல்வி பயின்றனர். ஒருநாள் சுதன்மா என்னும் முனிவர், தாம் செய்யும் வேள்விக்கு வரும்படித் தன் மாணவர்களை மேதாவி முனிவரிடம் அனுப்பினுர். மேதாவி முனிவர் ஒருப்பட்டு வேள்விக்குப் புறப்படும் முன், தன் மாணவர்களில் தர்ம சர்மா என்பவனை அழைத்துப் பர்ண சாலையையும், பசுக்களையும் பாதுகாக்கும்படிக் கட்டளை யிட்டுச் சென்முர். மேதாவி முனிவர், தர்ம சர்மாவிடம் அப்பொழுது பசுக்களின் பெருமையினை எடுத்துரைத்தார்.

பின்னர் சுதன்மா முனிவரின் வேள்விக்குச் சென்று, அதனை நடத்திக் கொடுத்து, சுதன்மா, தனக்குச் செய்த உபசாரங்களைப் பெற்றுத் திரும்பினார். தன் கட்டளைப்படி தர்ம சர்மா பசுக்களுக்குச் சரிவர உணவு கொடுத்துப் பாதுகாக்காததால்; பசுக்கள் மெலிந்தும், அழகிழந்தும், பால் சுருங்கியும் இருப்பதைக் கண்டார். மேதாவி முனிவருக்குக் கோபம் வந்துவிட்டது. தர்மசர்மாவை நாயுரு அடையும்படிச் சபித்தார். மாணவன் குருவை வணங்கித் தன்னை மன்னிக்க வேண்டினான். முனிவர், "நான் இட்ட சாபத்தின்படி நீ நாயாக வேண்டியதுதான். ஆனால், காவிரி பாயும் சோழ நாட்டில் கன்றாப்பூர் என்ற சிவத்தலம் ஒன்று இருக்கிறது. நீ அங்குச் சென்று அங்குள்ள சிவகங்கைத் தீர்த்தத்துள் முழுகினால் உன் நாய் வடிவம் நீங்கும்" என்று சாபக் கழிவிற்கு வழியும் சொன்னார்.

நாயுருவம் பெற்ற தர்மசர்மா பல தேசங்களையும் கடந்து சோழ தேசத்தை நோக்கி வரும் வழியில் காலவ முனிவரைக் கண்டு வணங்கித் தன் வரலாற்றைக் கூறினான். அவரும் மேதாவி முனிவர் சொன்னபடியே கன்றாப்பூரை அடைந்து சிவகங்கையில் நீராடப் பணித்தார். தர்மசர்மா கன்றாப்பூரை அடைந்து சிவகங்கையில் முழுகித் தன் நாயுரு நீங்கினான். தன் பழைய மனித உருவை அடைந்தான். கன்றாப்பூரில் தோன்றிய நடுதறிநாதரை வணங்கி அளவில்லா இன்பம் எய்தித் தன் குருவை அடைந்து அவருக்குப் பணி செய்து வாழ்ந்தான்.

திருநாவுக்கரசர், தென்னாட்டில் பல தலங்களை வணங்கிப் பாடித் திருவாரூரை அடைந்தார். பூங்கோயில் மேவிய புற்றிடங்கொண்ட புராதனை வழிபட்டுத் தேவாரம் பாடித் திருவாரூரில் பல நாள் தங்கியிருந்தார். அங்கிருந்து வலிவலம், கீழ்வேளூர் முதலிய தலங்களை அடைந்து வழிபட்டார். அப்பொழுது கன்றாப்பூரையும் அடைந்து வழிபட்டுத் திருத்தாண்டகம் பாடினார்.

திருச்சிற்றம்பலம்.

1. மாதினையோர் கூறுகந்தாய் மறைகொள் நாவா
மதிசூடி வானவர்கள் தங்கட் கெல்லாம்
நாதனே யென்றென்று பரவி நாளும்
நைந்துருகி வஞ்சமற் றன்பு கூர்ந்து
வாதனையால் முப்பொழுதும் பூநீர் கொண்டு
வைகன் மறவாது வாழ்த்தி ஏத்திக்
காதன்மையால் தொழும்அடியார் நெஞ்சின் உள்ளே
கன்ருப்பூர் நடுதறியைக் காண லாமே.

2. விடிவதுமே வெண்ணீற்றை மெய்யிற் பூசி
வெளுத்தமைந்த கீளொடுகோ வணமுந் தற்றுச்
செடியுடைய வல்வினைநோய் தீர்ப்பா யென்றும்
செல்கதிக்கு வழிகாட்டுஞ் சிவனே என்றும்
துடியனைய இடைமடவாள் பங்கா என்றும்
சுடலைதனில் நடமாடும் சோதீ யென்றும்
கடிமலர்தூய்த் தொழும்அடியார் நெஞ்சின் உள்ளே
கன்ருப்பூர் நடுதறியைக் காண லாமே.

3. எவரேனும் தாமாக விலாடத் திட்ட
திருநீறும் சாதனமும் கண்டால் உள்கி
உவராதே அவரவரைக் கண்ட போது
உவந்தடிமைத் திறம்நினைந்தங் குவந்து நோக்கி
இவர்தேவர் அவர்தேவர் என்று சொல்லி
இரண்டாட்டா தொழிந்தீசன் திறமே பேணிக்
கவராதே தொழும்அடியார் நெஞ்சின் உள்ளே
கன்ருப்பூர் நடுதறியைக் காண லாமே.

4. இலங்காலம் செல்லாநாள் என்று நெஞ்சத்து
இடையாதே யாவர்க்கும் பிச்சை யிட்டு
விலங்காதே நெறிநின்றங்கு அறிவே மிக்கு
மெய்யன்பு புகப்பெய்து பொய்யை நீக்கித்

துலங்காமெய் வானவரைக் காத்து நஞ்சம்
உண்டபிரான் அடியிணைக்கே சித்தம் வைத்துக்
கலங்காதே தொழும்அடியார் நெஞ்சின் உள்ளே
கன்றாப்பூர் நடுதறியைக் காண லாமே.

5. விருத்தனே வேலைவிடம் உண்ட கண்டா
விரிசடைமேல் வெண்டிங்கள் விளங்கச் சூடும்
ஒருத்தனே உமைகணவா உலக மூர்த்தி
நுந்தாத ஒண்சுடரே அடியார் தங்கள்
பொருத்தனே என்றென்று புலம்பி நாளும்
புலனைந்தும் அகத்தடக்கிப் புலம்பி நோக்கிக்
கருத்தினாற் றொழும்அடியார் நெஞ்சின் உள்ளே
கன்றாப்பூர் நடுதறியைக் காண லாமே.

6. பொசியினால் மிடைந்துபுழுப் பொதிந்த போர்வைப்
பொல்லாத புலாலுடம்பை நிலாசும் என்று
பசியினால் மீதூரப் பட்டே யீட்டிப்
பலர்க்குதவல் அதுஒழிந்து பவள வாயார்
வசியினால் அகப்பட்டு வீழா முன்னம்
வானவர்கோன் திருநாமம் அஞ்சும் சொல்லிக்
கசிவினால் தொழும்அடியார் நெஞ்சின் உள்ளே
கன்றாப்பூர் நடுதறியைக் காண லாமே.

7. ஐயினால் மிடறடைப்புண்டு ஆக்கை விட்டு
ஆவியார் போவதுமே அகத்தார் கூடி
மையினால் கண்ணெழுதி மாலை சூட்டி
மயானத்தில் இடுவதன்முன் மதியம் சூடும்
ஐயனார்க்கு ஆளாகி அன்பு மிக்கு
அகங்குழைந்து மெய்யரும்பி அடிகள் பாதம்
கையினால் தொழும்அடியார் நெஞ்சின் உள்ளே
கன்றாப்பூர் நடுதறியைக் காண லாமே.

8. திருதிமையால் ஐவரையும் காவல் ஏவித்
திகையாதே சிவாயநம என்னும் சிந்தைச்
சுருதிதனைத் துயக்கறுத்துத் துன்ப வெள்ளக்
கடல்நீந்திக் கரையேறும் கருத்தே மிக்குப்
பரிதிதனைப் பற்பறித்த பாவ நாசா
பரஞ்சுடரே என்றென்று பரவி நாளும்
கருதிமிகத் தொழும்அடியார் நெஞ்சின் உள்ளே
கன்றுப்பூர் நடுதறியைக் காண லாமே.

9. திருப்பாடல் கிடைத்திலது.

10. குனிந்தசிலை யால்புரம்மூன்று எரித்தாய் என்றும்
கூற்றுதைத்த குரைகழற்சே வடியாய் என்றும்
தனஞ்செயற்குப் பாசுபதம் ஈந்தாய் என்றும்
தசக்கிரீவன் மலையெடுக்க விரலால் ஊன்றி
முனிந்தவந்தன் சிரம்பத்தும் தாளும் தோளும்
முரணழித்திட்டு அருள்கொடுத்த மூர்த்தி என்றும்
கனிந்துமிகத் தொழும்அடியார் நெஞ்சின் உள்ளே
கன்றுப்பூர் நடுதறியைக் காண லாமே.

## க்ஷேத்திரக் கோவைத் திருத்தாண்டகம்.

நறையூரில் சித்தீச் சாம்நள் ளாறு
நாரையூர் நாகேச்சரம் நல்லூர் நல்ல
துறையூர் சோற்றுத்துறை சூல மங்கை
தோணிபுரம் துருத்தி சோமீச் சரம்
உறையூர் கடலொற்றி யூர்ஊற் றத்தூர்
ஓமாம் புலியூர் ஓர்எட கத்தும்
கறையூர் கருப்பறியல் கன்றுப் பூரும்
கயிலாய நாதனையே காண லாமே.

திருச்சிற்றம்பலம்.

## பெரிய புராணம்.

நீராரும் சடைமுடியார் நிலவுதிரு வலிவலமும் நினைந்து சென்று
வாராரும் முலைமங்கை உமைபங்கர் கழல்பணிந்து மகிழ்ந்துபாடிக்
காராரும் கறைக்கண்டார் கீழ்வேளூர் கன்றாப்பூர் கலந்துபாடி
ஆராத காதலினால் திருவாரூர் தனில் மீண்டும் அணைந்தார் அன்றே.

(திருநாவுக்கரசு நாயனார் புராணம் — செ. 228)

## திருப்பணி.

*சுமார் 27 ஆண்டுகளுக்கு முன் இவ்வாலயத்திற்குத் திருப்பணி நடைபெற்றுக் குடமுழுக்கும் நடத்தப் பெற்றது. இப்பொழுது திருமதில்களைப் புதுப்பித்தல், இராஜகோபுரம் விமானங்களுக்கும் நிறம் பூசுதல்; புதியனவா நவக்கிரகங்களை ப்ரதிட்டை செய்தல் முதலிய திருப்பணிகள் நடைபெற்று, துந்துபி-ஸு ஆவணி-மீ 20உ (5—9—1982) அன்று குடமுழுக்கு நடைபெறுகிறது.*

## நந்தவனம், பசுமடம்.

*சிறிய நந்தவனம், கோயில் பராமரிப்பில் உள்ளது. செட்டிநாடு - தேவக்கோட்டை, திரு.* **முத்து. க. அ. ராம. அண்ணாமலைச் செட்டியார்** *அவர்களால் பசுமடம் ஒன்று அமைக்கப் பெற்று சிறந்த முறையில் நடந்து வருகிறது. இவர்களது அறப்பணியாக உச்சிக் காலத்திற்கு குளித் தளிகை நிவேதனம் நடைபெற்றுத் தக்கவர்களுக்கு உணவு அளிக்கப்பெறுகிறது.*

## நாட்பூசையும், விழாக்களும்.

*இக் கோயிலில் ஐந்து கால பூசை பின்கண்டவாறு நடைபெறுகிறது.*

| | | | |
|---|---|---|---|
| *1.* | *கால சந்தி* | — | *காலை 8-30 மணிக்கு* |
| *2.* | *உச்சிக் காலம்* | — | *நண்பகல் 12 மணிக்கு* |
| *3.* | *சாயரட்சை* | -- | *மாலை 5-30 மணிக்கு* |
| *4.* | *இரண்டாம் காலம்* | — | *இரவு 7-30 மணிக்கு* |
| *5.* | *அர்த்த யாமம்* | — | *இரவு 8-30 மணிக்கு* |

இப்பொழுது வைகாசி விசாக உற்சவம் 3 நாள் விழாவாக ஆண்டுதோறும் நடைபெறுகிறது. இத் திருக் கோயில் உற்சவராக எழுந்தருளியிருக்கும் அருள்மிகு மாரியம்மனுக்கு ( சீதளாம்பிகைக்கு ) ஆண்டு தோறும் சித்திரை மாதத்தில் பத்து நாட்கள் மிகச் சிறப்பாகப் பெரு விழா நடைபெறுகின்றது.

## நிர்வாகம்.

இக்கோயில், தமிழக அரசு இந்து சமய அறநிலைய பாதுகாப்புக் கழகத்தின் நிர்வாகத்தில் செயல் அலுவலரால் நிர்வகிக்கப்படுகிறது. இவருக்கு உதவியாக அரசினரால் அறங்காவலர் குழு ஒன்று அமைக்கப் பெற்றுள்ளது.

செயலலுவர்: **திரு. S. ஜகதீசப் பெருமாள்** அவர்கள் M. A.

நிர்வாக அறங்காவலர், தலைவர்,

திரு. V. அரங்கராமானுஜம் அவர்கள்

உறுப்பினர்கள்: திரு. த. கோபால்சாமி அவர்கள்
,, G. சுப்பிரமணியம் B. SC. அவர்கள்
,, இராம. கருப்பஞ் செட்டியார் அவர்கள்
,, சே. முருகையன் அவர்கள்

## சொத்து விவரம்.

இக்கோயிலுக்கு புன்செய் நிலம் 22 ஏக்கர் - 54 சென்டும்,
நன்செய் நிலம் 253 ஏக்கர் - 84 சென்டும்
உள்ளன.

ஆண்டு நிகர வருமானம் ரூ. 60,000—00
செலவு ரூ. 40,000—00

குறிப்பு:- இந்த ஊரில் அருள்மிகு நடுதறிநாதர் திருக் கோயிலுக்குத் தவிர வேறு பட்டா நிலங்கள் வேறு யாருக்கும் சொந்தமாக இல்லை என்பது குறிப்பிடத் தக்கது. எல்லா நிலங்களும் இறைவன் பெயரிலேயே உள்ளன.

கருணாநிதி அச்சகம், திருவாரூர்.

உ

# "கன்றாப்பூர் நின்ற தறி"

நெஞ்சத்து மாசகற்றி நேர்மை வழிநடந்து
கொஞ்சுதமிழ்ப் பாவிசைத்துப் போற்றிடுவாய் – அஞ்சாதே
என்றுமுனைக் காத்தருளி ஏற்றமுறு வாழ்வருள்வான்
கன்றாப்பூர் நின்ற தறி. 1

நித்தமவன் நாமமோதி நெற்றியிலே நீறணிந்து
முத்தமிழில் முக்கண்ணன் பேர்பாடு – இத்தரையில்
குன்றெனவே பேர்விளங்கக் கொட்டிடுவான் பேரருளைக்
கன்றாப்பூர் நின்ற தறி. 2

அப்பரவர் கண்டவழி ஆலயத்தைச் சுத்தமாக்கி
இப்பிறவி ஈந்ததற்கு நன்றிசொல்வாய் – எப்போதும்
நன்றான வாழ்வருள்வான் குன்றாத செல்வமீவான்
கன்றாப்பூர் நின்ற தறி. 3



கருணாநிதி அச்சகம், திருவாரூர்.